1987 மார்ச் 28]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, எல்லா சர்க்கரை ஆலைகளிலும் ஒரேவிதமான விலைதான் தற்போது இருந்து வருகிறது. அந்தச் சர்க்கரை ஆலையில் விலை ரூ. 195 வீதம் மாநில அரசு நிர்ணயித்து வந்தது. அதை ரூ. 210 ஆக உயர்த்தித் தர பரிந்துரை செய்யப்பட்ட காரணத்தால் அந்த விலை இந்த ஆண்டு மட்டும் உயர்த்தித் தரப்பட்டது.

உத்திரமேரூர் தாலுக்கா, பெருநகர் மற்றும் மானாம்பதி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

218—(*வினா எண் 9835) திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தாலுக்காவில் உள்ள பெருநகர் மானாம்பதி கூட்டுக் குடிநீர்த் திட்டம் பூர்த்தி அடைந்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், பெருநகர் காலனி மக்களுக்கு இத்திட்டம் பயன் அளித்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : ஆம்.

திரு. க. நரசிம்மபல்லவன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பெருநகர், மானாம்பதி போன்ற கிராமங்களில் தன்னிறைவுத் திட்டம் மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எடுக்கப்பட்டு, அந்தத் திட்டங்கள் தற்போது நல்ல முறையிலே நிறைவேற்றித் தரப்பட்டிருக்கின்றன. காலனியில் சரியான முறையில் தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. அதை நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன். அதோடு தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட அனுமந்தாமங்கலம், ஆாணிப் பண்டிகை கூட்டுக் குடிநீர்த் திட்டமும் அதைப்போல், ஒர்க்காபேட்டை, களியாப்பேட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டமும் நிறைவேற்றித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாக, பெருநகர், பெருநகர் காலனி, பெருநகர் நடுக் காலனி, பெருநகர் மேட்டுக் காலனி, மானாம்பதி, சேத்துப்பட்டு, மேட்டூர் காலனி ஆகிய 7 பகுதிகள்—ஏறக்குறைய 4,820 குடியிருப்புகளைக் கொண்ட பகுதிகள்—பயன் அடைகின்றன. அதோடு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் கட்டி 38 பொதுக் குழாய்கள் மூலமாக, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நிலையில், இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்கான செயற்குறிப்புகள் ஏதும் இல்லை.

திரு. க. நரசிம்மபல்லவன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 காலனிகளில், குறிப்பாக நடுக் காலனியில் மட்டும்தான் சரியான முறையில் தண்ணீர் தரப்படுகிறது. எஞ்சிய இரண்டு காலனிகளுக்குத் தண்ணீர் தரப்படவில்லையென்ற சூழ்நிலையில் தயவுசெய்து அந்த இரண்டு காலனிகளுக்கும் தண்ணீர் தரும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

(திருவாளர்கள் குமரி அனந்தன் மற்றும் எஸ். என். இராமசாமி ஆகியோர் அவைக்குள் நுழைந்தபோது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மேசையைத் தட்டினர்).

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நடுக் காலனிக்குத் தண்ணீர் கொடுத்ததற்காக திரு. சித்தன் அவர்கள் மேசையைத் தட்டியதற்கு நன்றி. (சிரிப்பு) திருமங்கலத்துக் காரருக்கு நடுக் காலனிக்குத் தண்ணீர் கொடுப்பதிலே என்ன மகிழ்ச்சி என்று எனக்குத் தெரியவில்லை. சொல்ல வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேடசந்தூர் தாலுக்காவில் தக்காளி தொழிற்சாலை ஆரம்பித்தல்.

219—*வினா எண் 10205) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுக்காவில் தக்காளி சாறு மற்றும் தக்காளியில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்களுக்கான தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?